# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129891

1. District : கடலூர் மாவட்டம் | PS: ஊ.த.க. பிரிவு காவல்நிலையம் | Year: 2024 ஆண்டு | FIR No.: 8/2024 மு.த.அ. எண் | Date: 17.09.2024 நாள்

2. (i) Act சட்டம்: BNSS — Sections பிரிவுகள்: 106
   (ii) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by The Prevention Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7, 12 r/w 7
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் 16.09.2024 — Date to : நாள் வரை 16.09.2024
   Time Period : நேர அளவு — Time from நேரம் முதல் 16.10 hrs — Time to : நேரம் வரை 21.45 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.09.2024 — Time : நேரம் 1100 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III — Time : நேரம் 1100 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — தட்டச்சு புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 34 கி.மீ. தென்மேற்கு.
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி சார் பதிவாளர் அலுவலகம், காடாம்புலியூர்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் பா.சுஜாதா — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ரவிச்சந்திரன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 48 — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் ---- — Place of Issue : வழங்கப்பட்ட இடம் ----
   (f) Occupation : தொழில் ஆய்வுக்குழு ஆய்வாளர் — (g) Address : முகவரி கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர் .

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   **குற்றம்சாட்டப்பட்டவர்கள் வரிசை எண் 1 முதல் 5 வரை தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   **தாமதம் இல்லை**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

(தொடர்ச்சி பக்கம் – 3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank …………………. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………….. பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………….. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 17/9/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
*குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /*
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 17/9/24

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

17.09.24 at 17.00hrs

Name: பெயர் ச. ராஜேந்திரன்
Rank: நிலை ………………….No. எண் ……….
காவல் ஆய்வாளர்
ஊ.கு.க., கடலூர்.

பக்கம் 1–ன் தொடர்ச்சி

## தனித்தாள்

**கடலூர் ஊ.த.க.பிரிவு குற்ற எண். 8/2024–ல் பக்கம் 1 வரிசை எண்.7–ல் கூறியுள்ள குற்றம் சாட்டப்பட்டவர்களின் வரிசை எண் 1 முதல் 5 வரையிலான விவர தனித்தாள் :**

(1) திருமதி.R.வேல்விழி, வயது 55, உதவியாளர், (பொறுப்பு) சார் பதிவாளர், காடாம்புலியூர் சார் பதிவகம், கடலூர் பதிவு மாவட்டம்.

(2) திரு.M.கதிர்காமன், வயது 44, த/பெ, முத்துக்குமாரசாமி (ஆவண எழுத்தர்). எண்.155, நடுத்தெரு, காடாம்புலியூர், கடலூர் மாவட்டம்.

(3)திருமதி.வை.கலைவாணி, வயது 47, க/பெ, வைத்தியலிங்கம், ஆவண எழுத்தர், எண்.50, முருகன் கோவில் தெரு, வடக்குத்து, குறிஞ்சிப்பாடி வட்டம், கடலூர் மாவட்டம்.

(4)திரு.செ.வைத்தியலிங்கம், வயது 50, த/பெ, செல்வராஜ், எண்.50, முருகன் கோவில் தெரு, வடக்குத்து, குறிஞ்சிப்பாடி வட்டம், கடலூர் மாவட்டம்.

(5) திரு.வே.ஸ்ரீனிவாசன், வயது 44, த/பெ, வேணு. இடைத்தரகர், எண்.70, வடக்குத்தெரு, மேல்மாம்பட்டு, பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

இன்று 17.09.2024-ந்தேதி காலை 11.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, திருமதி.பா.சுஜாதா, ஆய்வுக்குழு ஆய்வாளர், கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு, அனுப்புநர் (பா.சுஜாதா) ஆய்வுக்குழு ஆய்வாளர், கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். ந.க.எண்.A/495/2024 நாள் : 17.09.2024, அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – காடாம்புலியூர் சார் பதிவாளர் அலுவலகம் – கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம் ஒப்படைப்பு - நடவடிக்கை வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) ஆய்வுக்குழு ஆய்வாளரான பா.சுஜாதா ஆகிய நான் எனது அலுவலகத்தில் இருக்கும்போது, கடலூர் மாவட்டம், காடாம்புலியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில், பத்திரப்பதிவுக்காக அலுவலகம் வரும் பொதுமக்களிடம் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் லஞ்ச பணம் பெற்று வைத்துள்ளார் என்ற ரகசிய தகவல் எனக்கு கிடைத்தது. பின்னர் உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மதியம் சுமார் 14.30 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த காவல் ஆய்வாளர் ச.சுந்தரராஜ் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி காடாம்புலியூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 16.00 மணிக்கு மேல் சென்றால் அங்கு காடாம்புலியூர் சார் பதிவாளர் அவர்களுக்கு கொடுக்க உள்ள மற்றும் ஏற்கனவே பெற்று வைத்துள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், காவல் ஆய்வாளர் திரு.ச.சுந்தரராஜ் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், காவல் ஆய்வாளர் திரு.ச.சுந்தரராஜ் மற்றும்

அவரது காவல் குழுவினர்களும் மாலை சுமார் 15.00 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு வடக்கு தெற்காக செல்லும் பண்ருட்டி – கும்பகோணம் சாலையின் கிழக்கு புறமாக அமைந்துள்ள காடாம்புலியூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சற்று தொலைவில் வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் காடாம்புலியூர் சார் பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 16.10 மணிக்கு வடக்கு பார்த்தவாறு உள்ள நுழைவு வாயில் வழியாக சென்று, மேற்கு பார்த்தவாறு அமைந்து இருக்கும் காடாம்புலியூர் சார் பதிவாளர் அலுவலக கட்டிட வளாகத்திற்குள் சென்று மெயின் கேட்டை அடைத்து பாதுகாப்பிற்கு காவலரை நியமித்து பின்னர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். பிரதான வாயிலின் வலது புறம் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த சார் பதிவாளர் அவர்களிடம் என்னையும், காவல் ஆய்வாளர் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் சார் பதிவாளர் அவர்களை விசாரித்தபோது, அவர் தனது பெயர் R.வேல்விழி, வயது 55, க/பெ அன்பழகன், உதவியாளர், கடலூர் இணை-2 சார்பதிவகம் என்றும். தற்போது காடாம்புலியூர் சார்பதிவகத்தில் பொறுப்பு சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். உடன் இருந்த நபர்களை விசாரித்தபோது, (1) சத்தியமூர்த்தி, த/பெ, கிருஷ்ணசாமி, இளநிலை உதவியாளர், (2) சூர்யா பழனி, த/பெ, பழனி, டேட்டா என்ட்ரி ஆபரேட்டர், (3) ஏழுமலை, த/பெ, கிருஷ்ணன், System Admin (Zigma Staff), (4) கதிர்காமன், த/பெ, முத்துக்குமாரசாமி, (பதிவு பெற்ற ஆவண எழுத்தர் முத்துக்குமாரசாமி என்பவரின் மகன்), (5) கலைவாணி, க/பெ, வைத்தியலிங்கம், பதிவு பெற்ற ஆவண எழுத்தர், (6) வைத்தியலிங்கம், த/பெ, செல்வராஜ், (பதிவு பெற்ற ஆவண எழுத்தர் கலைவாணி என்பவரின் கணவர்), (7) ஸ்ரீனிவாசன், த/பெ, வேணு, (சார் பதிவாளர் அலுவலகத்தின் இடைத்தரகர்), (8) விஜயராமன், த/பெ, மணிவேல், மணி வேல் நெட் சென்டர் உரிமையாளர், (9)திருமூர்த்தி, த/பெ, தில்லை கோவிந்தன், DTP Center, காடாம்புலியூர் ஆகியோர் காடாம்புலியூர் சார்பதிவகத்தில் ஆஜரில் இருந்தனர். பின்னர் நான் மேற்படி

அலுவலகத்தை ஆய்வு செய்ய போகும் விவரத்தை அவர்களிடம் தெரிவித்தேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அங்கிருந்தவர்கள் முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை தெரியப்படுத்தினோம். மேற்படி காடாம்புலியூர் சார்பதிவாளர் அலுவலகமானது சுற்றுசுவற்றுடன் கூடிய அரசு கட்டிடமாகும். இதன் பிரதான வாயிற்படி மேற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் வராண்டா சுமார் 4க்கு 12 அடி நீள அகலமுள்ளது. அதனையடுத்து சார் பதிவாளர் இருக்கை அமைந்துள்ள ஹாலானது 18க்கு 30 அடி நீள அகலமுள்ளது. அங்கு வடக்கு பார்த்து போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த சார் பதிவாளரிடம் தெரிவித்த பின்னர், அவரது மேஜையானது சோதனை செய்யப்பட்டதில், பணம் ஏதும் இல்லை. மேற்படி சார்பதிவாளர் இருக்கைக்கு இடதுபுறம் கிழக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் சத்தியமூர்த்தி என்பவரது மேஜையானது சோதனை செய்யப்பட்டதில், பணம் ஏதும் இல்லை. அந்த இருக்கைக்கு அடுத்து கிழக்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்த சூர்ய பழனி என்பவரது மேஜையை சோதனை செய்ய அதில் பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. சார் பதிவாளர் இருக்கைக்கு எதிர்புறம் தெற்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்த System Admin திரு.ஏழுமலை என்பவரது மேஜையை சோதனை செய்ய பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. அதனை தொடர்ந்து ஹாலுக்கு வடக்கில் அமைந்துள்ள கணிணி அறையை சோதனை செய்ய கணிணி வைக்கப்பட்டுள்ள மேஜையின் கீழ் இரண்டு காக்கி நிற கவர்களில் ரூ.50,000/- (500 X 100) மற்றும் ரூ.42,000/- (500 X 84) பணம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேற்சொன்ன பணத்தை பற்றி விசாரிக்க, அதற்கு யாரும் உரிமை கோராததால் அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் ஹாலில் ஆஜரில் இருந்த ஆவண எழுத்தர் திருமதி.கலைவாணி என்பவரை பெண் தலைமை காவலர் 1314 திருமதி.தேவி என்பவர் உதவியுடன் சோதனை செய்ய அவர் கையில் வைத்திருந்த கோப்பில்

ரூ.27,000/- (500 X 48, 200 X 5, 100 X 19, 50 X 2) பணம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் சார் பதிவாளர் அலுவலக ஹாலில் இருந்த ஆவண எழுத்தர் கலைவாணியின் கணவர் வைத்தியலிங்கம் என்பவரை சோதனை செய்ய அவரிடமிருந்து ரூ.4,500/- (500 X 9) பணம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் காடாம்புலியூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் இடைத்தரகராக செயல்பட்டு வருவதாக தெரியவரும் ஸ்ரீனிவாசன் என்பவரை சோதனை செய்ய ரூ.40,000/- (500 X 80) பணம் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேற்படி ஆய்வின்போது கண்டெடுக்கப்பட்ட பணம் குறித்த எனது விசாரணையில் மேற்சொன்ன நபர்கள் தாங்கள் வைத்திருந்த பணத்திற்கான சட்டப்பூர்வமான முகாந்திரம் ஏதும் தெரிவிக்காததால் மேற்படி கண்டுபிடிக்கப்பட்ட பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தின் உள்ளே இருந்த ஆவண எழுத்தர் முத்துக்குமாரசாமியின் மகன் கதிர்காமன் என்பவரை விசாரிக்க, தங்களது அலுவலகத்தில் கடந்த 13.09.2024ந்தேதி 5 ஆவணங்களும் மற்றும் இன்று 16.09.2024ந்தேதி 7 ஆவணங்களும் காடாம்புலியூர் சார் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டதாகவும், அதற்காக சார் பதிவாளருக்கு கொடுக்க வேண்டிய பணம் ரூ.53,500/-ஐ காடாம்புலியூர் மெயின்ரோட்டில் உள்ள தனது அலுவலகத்தில் வைத்திருப்பதாக சொன்னதன்பேரில், அவருடன், ஒரு காவலரை அனுப்பி அந்த பணத்தை எடுத்து வர கூறப்பட்டது. அதன்படி கதிர்காமன் அவரது அலுவலகத்திற்கு காவலருடன் சென்று, சார் பதிவாளர் அவர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் ரூ.53,500/- ஐ கொண்டுவந்து ஆஜர்படுத்தியதை வழக்கின் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் மீண்டும் காடாம்புலியூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து ஹாலுக்கு கிழக்கு புறத்தில் அமைந்துள்ள பதிவறைக்கு உள்ளே சென்று அங்கு சிமெண்ட் ரேக்குகள், இரும்பு ரேக்குகள் மற்றும் இரும்பு பீரோக்களை சோதனை செய்ய அதில் பணம் ஏதும் இல்லை. மேலும், காடாம்புலியூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் 1) தொகுதி எண்.27, தனி நபர் பண இருப்பு பதிவேடு 01.01.2024 முதல் 31.12.2024 வரை என்று லேபிள் ஒட்டப்பட்ட பதிவேடு (மொத்த பக்கங்கள் 1 முதல் 98, பயன்படுத்தப்பட்ட பக்கங்கள் 1 முதல் 16 வரை),

(2) தொகுதி எண்.50, வருகை பதிவேடு 01.01.2024 முதல் 31.12.2024 வரை என்று லேபிள் ஒட்டப்பட்ட பதிவேடு (மொத்த பக்கங்கள் 1 முதல் 15, பயன்படுத்தப்பட்ட பக்கங்கள் 1 முதல் 9 வரை), (3) 13.09.2024 ந்தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் abstract மற்றும் 16.09.2024 ந்தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் abstract பதிவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பமிட்டு மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் சார்பதிவாளர் (பொறுப்பு) திருமதி.வேல்விழி, ஆவண எழுத்தர் முத்துக்குமாரசாமி என்பவரின் மகன் கதிர்காமன், இடைத்தரகர் ஸ்ரீனிவாசன் ஆவண எழுத்தர் கலைவாணி, அவரது கணவர் வைத்தியலிங்கம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் சோதனையின்போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது காடாம்புலியூர் சார்பதிவாளர் (பொறுப்பு), அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள், அலுவலகத்திலிருந்த ஆவண எழுத்தர்களுக்கு எந்தவித மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையிலோ நடந்து கொள்ளவில்லை. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜரை சம்பவ இடத்திலேயே மாலை சுமார் 16.10 மணிக்கு துவக்கப்பட்டு இரவு சுமார் 21.45 மணிக்கு முடிக்கப்பட்டது. 16.09.2024ந்தேதி எனது தலைமையிலான திடீர் ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.2,17,000/-, (1) திருமதி.R.வேல்விழி, உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு), (2) ஆவண எழுத்தர் திரு.முத்துக்குமாரசாமி என்பவரின் மகன் திரு.M.கதிர்காமன், (3) திருமதி.கலைவாணி, ஆவண எழுத்தர், (4) ஆவண எழுத்தர் திருமதி.கலைவாணியின் கணவர் திரு.வைத்தியலிங்கம், (5) திரு.ஸ்ரீனிவாசன், இடைத்தரகர் ஆகியோரது வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு மகஜர் ஆகியவற்றுடன் இன்று 17.09.2024ந்தேதி காலை 11.00 மணிக்கு, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி புகார் மனுவை

தங்களிடம் கொடுக்கிறேன். எனவே (1) திருமதி.R.வேல்விழி, வயது 55, உதவியாளர், (பொறுப்பு) சார் பதிவாளர், காடாம்புலியூர் சார் பதிவகம், கடலூர் பதிவு மாவட்டம், (2) ஆவண எழுத்தர் திரு.முத்துக்குமாரசாமி என்பவரின் மகன் திரு.M.கதிர்காமன், (3) திருமதி.கலைவாணி, ஆவண எழுத்தர், (4) ஆவண எழுத்தர் திருமதி.கலைவாணியின் கணவர் திரு.வைத்தியலிங்கம், (5) திரு.ஸ்ரீனிவாசன், இடைத்தரகர் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம் XXXX) 17.09.2024 (பா.சுஜாதா), ஆய்வுக்குழு ஆய்வாளர், கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர்.

Sir,

Received the above complaint on 17.09.2024 at about 11.00 hrs., Hence, I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption in Cr.No.8/2024, U/s 106 BNSS and 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 17.09.2024 at 12.00 hrs., sd/- xxxxx 17.09.2024 (S.SUNDRARAJ), Inspector of Police, V & AC, Cuddalore.

17/9/24

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Cuddalore